**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

**CC. No: 61/2026** Date: 02.07.2026

**Prosecution Witness**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | **PW : 1** |
| Name | : | K. பாரதி, தலைமை காவலர் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Age | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 02.07.2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது ஒகேனக்கல் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 14.04.2025 ம் தேதி 13.00 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.s.கோபி அவர்களின் உத்தரவின்பேரில் நானும், பெண் தலைமை காவலர் 456, திருமதி. ராணி என்பவரும் மதுவிலக்கு குற்றம் சம்பந்தமாக தருமபுரி நகர காவல் நிலையம் எல்லைக்குட்பட்ட குப்பாண்டிதெரு அருகில் கண்காணித்து வந்தபோது சின்னராஜ் என்பவரின் மனைவி ராதா என்பவர் எங்களை பார்த்து ஓட எத்தனித்தவரை சந்தேகத்தின் பேரில் பிடித்து விசாரித்தபோது தலா 180 ML அளவுகொண்ட 29 Black pearl Brandy பாட்டில்களை வைத்திருந்தார். எதிரியை விசாரித்தபோது மதுபாட்டில்களை விற்பனை செய்வதற்காக வைத்திருந்ததாக ஒப்புக்கொண்டார். சம்பவ இடத்தில் வைத்து மேற்படி எதிரியிடமிருந்து மேற்படி தலா 180 ML அளவுகொண்ட 29 Black pearl Brandy பாட்டில்களை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார். அதில் தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் நானும், பெண் தலைமை காவலர் திருமதி. ராணி என்பவரும் கையொப்பம் செய்தோம். **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.1 ஆகும்.** பின்னர் எதிரியை கைதுசெய்து நிலையம் அழைத்துவந்து வழக்கு பதிவுசெய்தார். இதுசம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் இடம் குடியிருப்பு பகுதி என்றும், அது பொதுமக்கள் அதிகமாக நடமாடும் இடம் என்றால் சரிதான். எதிரி மேற்படி மதுபாட்டில்களை எங்கிருந்து வாங்கி வந்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது.

கைப்பற்றுதல் மகஜர் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். என்னுடம் கையொப்பம் செய்ததாக சொல்லப்படும் பெண் தலைமை காவலர் ராணி என்பவரும் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தார் என்றால் சரிதான். எதிரி மதுபானங்களை அரசு அனுமதியின்றி விற்பனை செய்வதாக தனிநபர் யாரும் புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன நாள், நேரம், இடத்தில் எதிரி எந்தவித குற்ற சம்பவத்திலும் ஈடுபடவில்லை என்றும், அவரிடமிருந்து எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. புள்ளிவிபர கணக்கிற்காக எனது மேலதிகாரிகள் உத்தரவிற்கிணங்க போடப்பட்ட பொய்யான வழக்கு என்றும், அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

TAMIL ARASU A

Digitally signed by TAMIL ARASU A
Date: 2026.07.02 17:27:00 +0530